# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 159 | சனிக்கிழமை Saturday | 05.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மத்திய அமைச்சரவை விரைவில் விரிவாக்கம் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வாய்ப்பு



மத்திய அமைச்சரவை விரைவில் விரிவுபடுத்தப்பட உள்ளது என்றும், அப்போது வயதில் மூத்தவர்கள் பொறுப்புகளைக் குறைந்து இளம் தலைமுறையினருக்கு அதிக வாய்ப்பு அளிக்கப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்மூலம், நீண்ட காலமாக தாமதப்படுத்தப்பட்டு வந்த மத்திய அமைச்சரவை விரிவாக்கம் முடிவுக்கு வருதாகத் தெரிகிறது. ஆகஸ்ட் 26-ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய அமைச்சரவை விரிவாக்கம் உறுதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இக்கூட்டத்தில் பேசிய பிரதமர், "அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய உறுப்பினர்களை சந்திப்போம்" எனக்கூறியதாகத் தெரிகிறது. முன்னதாக, சர்வதேச நாடுகளுடன் கூட்டங்கள், நேபாள வெள்ளம் என பல்வேறு முக்கியப் பணிகளால் மத்திய அரசு பணிச்சுமையில் சிக்கியிருந்தது.

இதனால், அமைச்சரவை மாற்றத்திற்கு நாள் குறிக்கப்படாமல் இருந்தது. தற்போது செப்.5 அல்லது 6-ம் தேதி இந்த மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஜென்ஸீ தலைமுறையைக் கருத்தில்கொண்டு, இம்முறை அமைச்சரவையில் 24 இளைஞர்கள் அதிகரிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது. அதேபோல் பெண்களின் எண்ணிக்கையும் அமைச்சரவையில் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, 70 வயதுக்கு மேற்பட்ட 12 பேர் கேபினட் அமைச்சர்களாகவும், தனிப்பொறுப்பு வகிக்கும் இணையமைச்சர்களாகவும் உள்ளனர். 81 வயதான ஜிதன் ராம் மாஞ்சி உள்ளிட்ட வயதில் மூத்தவர்கள் 14 பேர் அமைச்சரவையில் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோரை அகற்றி அவர்களுக்கு கட்சி நிர்வாகம் மற்றும் மாநிலங்களில் கட்சிப் பொறுப்பை அளிக்கத் திட்டமிடப்படுகிறது. செயல்திறன் அடிப்படையில் தற்போதைய அமைச்சர்கள் பலரை நீக்கவும் இந்த அமைச்சரவை மாற்றத்தில் முக்கிய அங்கமாக உள்ளது. இதுதவிர பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் (என்டிஏ) உறுப்பு கட்சிகளுக்கும் புதிய அமைச்சரவையில் அதிக வாய்ப்பு கிடைக்க உள்ளது.

திரிணமூல் காங்கிரஸிலிருந்து பிரிந்து உருவான 20 எம்பிக்களை கொண்ட குழு இப்போது என்டிஏவில் உள்ளது. அவர்களுக்கு இடமளிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு உருவாகி உள்ளது. பிஹாரின் நிதிஷ்குமார் கட்சியான ஐக்கிய ஜனதா தளத்தை விட ஷிண்டேவின் சிவசேனாவில் அதிக எம்பிக்கள் உள்ளதால், அக்கட்சியின் அமைச்சர்கள் எண்ணிக்கை கூடும் வாய்ப்புகளும் பிரகாசமாகத் தெரிகின்றன.

மகராஷ்டிராவின் கூட்டணியான தேசியவாத காங்கிரஸும் கூடுதல் இடங்களைக் கோருகிறது. சரத்பவாரின் என்சிபி பிரிவுக்கும் அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட உள்ளது. இதில், பவாரின் மகளான சுப்ரியா சுலேவின் பெயர் அதிகம் அடிபடுகிறது. இந்தமுறை, எதிர்கட்சியான திமுகவையும் அமைச்சரவையில் சேர்க்கும் முயற்சி கைகூடவில்லை எனத் தகவல் வெளியாகி உள்ளது. வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களைக்கருத்தில்கொண்டு, சில மாநிலங்களில் அமைச்சர்களின் எண்ணிக்கையிலும் மாற்றம் செய்யப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமர் மோடி அமைச்சரவையிலிருந்து தர்மேந்திர பிரதான், ஜார்ஜ் குரியன் மற்றும் ரவ்னீத்சிங் பிட்டு ஆகிய மூவர் ராஜினாமா செய்துள்ளனர்.

தற்போது 29 கேபினட் அமைச்சர்கள், தனிப்பொறுப்பு வகிக்கும் 5 இணையமைச்சர்கள் மற்றும் 34 இணையமைச்சர்கள் உள்ளனர். அதாவது, பிரதமர் உட்பட அமைச்சரவையில் தற்போது 69 உறுப்பினர்கள் உள்ளனர்; அமைச்சரவையின் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 81 ஆகும். இதன் மூலம், கூடுதலாக 12 அமைச்சர்களை நியமிக்க முடியும்.

# "முதல்வருக்கு அவகாசம் கொடுங்கள்" தூய்மைப் பணியாளர்களிடம் அமைச்சர்கள் வேண்டுகோள்



சென்னை: "தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முதல்வர் விஜய்க்கு அவகாசம் கொடுங்கள்," என அமைச்சர்கள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர்.நிர்மல் குமார், ராஜ்மோகன் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். சம்பள உயர்வு வழங்க வேண்டும். மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும். பழைய முறையில் வருகைப் பதிவை செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உழைப்போர் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கெனவே மாநகராட்சி ஆணையர் ஜி. எஸ்.சமீரன், அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோருடன் இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதில் உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை. இதற்கிடையில் தூய்மைப் பணியாளர்கள் விவகாரத்தில் சுமுகத்தேர்வு காணப்படும் என அமைச்சர் ராஜ்மோகன் சட்டப்பேரவையில் உறுதியளித்திருந்தார்.

இருப்பினும் "முதல்வர் எங்களை சந்திக்கும் வரை, எங்கள் கோரிக்கையை கேட்கும் வரை போராட்டம் தொடரும்," என தூய்மைப் பணியாளர்கள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் 16-வது நாளான இன்று ரிப்பன் மாளிகை வளாகத்தில் போராட்டம் நடத்தினர். அவர்களுடன் அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி. ஆர்.நிர்மல் குமார், ராஜ்மோகன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது பேசிய அமைச்சர் ஆனந்த், "உங்களை சந்தித்து உங்கள் கோரிக்கையை கேட்குமாறு முதல்வர் எங்களை அனுப்பி வைத்துள்ளார்.


அவர் ஏழை எளிய மக்களுடன் இருக்கும் மக்கள் முதல்வர். அவர் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருப்பது உங்கள் முகத்தை பார்க்கும் போதே தெரிகிறது. உங்கள் கோரிக்கை நியாயமானது. இப்போது நிதிநிலை மோசமாக இருக்கிறது. நிதி நிலையை பொறுத்து உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்." என்றார்.

அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் பேசும்போது, "இது உங்கள் அரசு. உங்களை இவ்வளவு வருத்திக் கொள்ள வேண்டாம். என்னென்ன முடியுமோ அனைத்து கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றும்," என்றார்.

அமைச்சர் ராஜ் மோகன் பேசும்போது, "நாங்கள் இங்கு அமைச்சராக வரவில்லை. உங்கள் வீட்டுப் பிள்ளையாகத்தான் இங்கு நிற்கிறோம். இத்தனை நாட்கள் அறவழியில் போராடிய உங்களுக்கு நான் தலைவணங்குகிறேன். போராடுவது உங்கள் உரிமை. உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவது எங்கள் கடமை," என்றார். அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசும்போது, "முதல்வர் விஜய் வெற்றி பெற்ற பிறகு அவர் அளித்த வாக்குறுதிகளை, எவையெல்லாம் முடியுமோ அவற்றையெல்லாம் செயல்படுத்தி வருகிறார். கடந்த ஆட்சியில் பல துறைகளில் எல்லாமே வெளிமுகமை மூலமாக பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதை உடனே மாற்ற முடியாது.

கடந்த ஆட்சியில் கடன் வாங்கி ஊழல் செய்தார்கள். இந்த ஆட்சியில் கடன் வாங்கி மக்கள் நலத் திட்டங்களை முதல்வர் செய்து வருகிறார். இந்த நூறு நாட்களில் முதல்வர் விஜய் முதல்வர் குடும்ப ஊழலை ஒழித்துள்ளார். சென்னை அழகாக இருப்பதற்கு நீங்கள் தான் காரணம். உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முதல்வர் விஜய்க்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்," என கோரிக்கை விடுத்தார்.

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது இஸ்ரோவின் அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் EOS05



ஸ்ரீஹரிகோட்டா: பூமியில் இருந்து சுமார் 36,000 கி.மீ. உயரத்தில் புவி - சுற்றுப்பாதையில் பயணித்து படமெடுக்கும் 2,367 கிலோ எடைகொண்ட இந்தியாவின் முதல் அதிக எடைகொண்ட EOS-05 செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி வரலாற்றில் இடம்பிடித்தது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஸ்தவான் ஏவுகணைத் தளத்தில் இருந்து இன்று அதிகாலை 2.55 மணிக்கு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. நள்ளிரவு நேரம், மழை என சவால்கள் இருந்தபோதிலும் ஏராளமான பொதுமக்கள் குடைகளுடன் திரண்டு இந்த ஏவுதலை உற்சாகமாக கண்டு ரசித்தனர். செயற்கைக்கோள் ஏவப்பட்ட சுமார் 18 நிமிடங்களுக்குப் பிறகு திட்டமிட்டபடி துணை புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இது இந்த ஆண்டில் இஸ்ரோவின் முதல் வெற்றியாக அமைந்தது.

பூமியைக் கண்காணிக்கும் பல செயற்கைக்கோள்கள் குறைந்த புவி சுற்றுப்பாதையில் செயல்படும் நிலையில் EOS - 05 செயற்கைக்கோள் பூமியில் இருந்து 36,000 கி.மீ. உயரத்தில் உள்ள புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த செயற்கைக்கோள் பூமியின் சுழற்சி வேகத்துக்கு இணையாக செயல்படும். இதேபோல், இதுவரை விண்ணில் நிலைநிறுத்தப்பட்ட செயற்கைக்கோள்களிலேயே இதுதான் அதிக எடை கொண்டதாகும். விண்ணில் உள்ள கண் என்று வர்ணிக்கப்படும் இந்த செயற்கைக்கோள் நிகழ்நேர படங்களை வழங்குவதோடு, விவசாயம் மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட துறைகளில் நாட்டுக்கு உதவும்.

முந்தைய சில தோல்விகளுக்குப் பிறகு கிடைத்துள்ள இந்த வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள இஸ்ரோ தலைவர் வி. நாராயணன், "GSLV F-17 வாகனம், மேம்பட்ட EOS-05 புவி-படமெடுக்கும் செயற்கைக்கோளைத் திட்டமிடப்பட்டபடி சுற்றுப்பாதையில் வெற்றிகரமாகவும் துல்லியமாகவும் நிலைநிறுத்தியுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 107-வது ஏவுதல் நிகழ்வு இது. அத்துடன் GSLV-யின் 19-வது பணி இதுவாகும்" என்று தெரிவித்தார். பிரதமர் மோடி எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான 'இஓஎஸ்-05'-ஐ சுமந்தபடி 'ஜிஎஸ்எல்வி-எஃப்17 ராக்கெட் வெள்ளிக்கிழமை (செப்.4) அதிகாலை 2.55 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. இது இஸ்ரோவின் மற்றொரு சிறப்பான சாதனை மற்றும் நாட்டின் பெருமைக்குரிய தருணம்" என்று குறிப்பிட்டுள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வாலாஜாவில் ஒன்றிய குழு கூட்டத்தை திட்டமிட்டு புறக்கணித்த தலைவர் சேஷாவெங்கட், அதிகார துஷ்பிரயோகம், பாகுபாடுடன் முறைகேடு, பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு



ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இன்று நடைபெறவிருந்த மாதாந்திர ஒன்றிய குழு கூட்டத்தை வேண்டுமென்றே புறக்கணித்து, அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் அவமானப்படுத்தும் நோக்கில் செயல்பட்டதாக ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட் மீது சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். வாலாஜா வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாதாந்திர கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் பங்கேற்க ஒன்றிய குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வந்திருந்தனர். அப்போது, மாவட்ட ஆட்சியரின் அவசர அழைப்பின் பேரில் சென்ற வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) திரும்பி வர சற்று தாமதமானதாகக் கூறப்படுகிறது. இதைக் இதனை காரணமாக கொண்டு, திட்டமிட்டே கூட்டத்தைப் புறக்கணிக்க முடிவு செய்த சேஷாவெங்கட், அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து வெளிநடப்பு செய்து செய்தியாளர்களை சந்தித்து பேட்டி அளித்ததாக கூறப்படுகிறது.

ஒன்றிய குழு தலைவராக பொறுப்பேற்ற நாளிலிருந்தே தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் நடைபெறும் பல்வேறு திட்டப் பணிகளில் குறுக்கு வழிகளில் பெருந்தொகையைக் கமிஷனாகப் பெற்று வந்ததாகக் கட்சி மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் வட்டாரத்தில் பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மேலும், பட்டியலின மக்களுக்கான திட்டப் பணிகளை பல நூதன முறைகளைக் கையாண்டு தடுத்து நிறுத்தியதாகவும், கட்சிப் பொறுப்புகளை வழங்குவதில் ஆதிதிராவிட மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டியதாகவும் இவர் ஒரு சாதி வெறிபிடித்தவர் என்றே கூறப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்குத் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து அவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி வந்ததாகவும், அலுவலகத்தில் பணியாற்றிய பெண் ஊழியரிடம் கண்ணியக்குறைவாக நடந்து கொண்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் இவருடைய இத்தகைய போக்கைக் கண்டித்து, முன்னாள் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆர். காந்தி பலமுறை கடுமையாக எச்சரித்து அறிவுரைகள் வழங்கியதாகவும் தெரிகிறது.

இன்றைய கூட்டத்தைப் புறக்கணித்த கையோடு, அனைத்து உறுப்பினர்களையும் தனது சொந்த அலுவலக அறைக்கு வரவழைத்து, அங்கு வைத்து தீர்மானங்களைப் பேசி கையொப்பமிட வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. மேலும், வட்டார வளர்ச்சி அலுவலரைத் தனது அறைக்கு வரவழைத்துத் தாறுமாறாகப் பேசி மிரட்டியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பதவியைத் துஷ்பிரயோகம் செய்து, பல்வேறு புகார்களுக்கு உள்ளாகி வரும் வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட் மீது துறை சார்ந்த அதிகாரிகள் உடனடியாக விசாரணையைத் தொடங்கி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தூத்துக்குடி சண்முகபுரம் வண்ணார்தெருவில் உள்ள நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை, பள்ளி முன்தளம் உள்ளிட்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள மேயர் ஜெகன் பெரியசாமி உத்தரவு

தூத்துக்குடி சண்முகபுரம் வண்ணார்தெரு 3வது தொடர்ச்சியில் அமைந்துள்ள 42வது வார்டு மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கோட்டை சுவர் உடைந்து பாதுகாப்பற்ற நிலையில் இருந்ததுடன், கழிப்பறை வசதிகளும் போதிய அளவில் இல்லாமல் இருந்தது. மேலும், பள்ளியின் முன்பகுதியில் உள்ள தளம் சீராக இல்லாத நிலை, பள்ளியின் கோட்டை சுவர் தாழ்வாக இருப்பது மற்றும் மாணவர்களின் குடிநீர் தேவைக்காக அக்வா குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை 42வது வார்டு பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா முன்வைத்து, பள்ளியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனை அறிந்த தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து மாநகராட்சி அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு, பள்ளியில் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

பள்ளியின் பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்த மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமிக்கும், பணிகளை துரிதமாக மேற்கொண்டு வரும் மாநகராட்சி அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

## மாதாநகரில் ஸ்ரீ சந்தனமாரி அம்மன் கோவில் கொடை விழா:

# 10ம் வகுப்பு, 12ம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ, மாணவியருக்கு தங்கம், வெள்ளி நாணயங்களை முன்னாள் எம்.எல்.ஏ எம்.சி. சண்முகையா வழங்கினார்

தூத்துக்குடி மாதாநகர் அருள்மிகு ஸ்ரீ சந்தனமாரி அம்மன் திருக்கோவிலின் 44-ஆம் ஆண்டு கொடை விழாவை முன்னிட்டு, மாதாநகர் MST கபடி குழு சார்பில் கோவில் திடலில் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது.

இதையொட்டி ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 மற்றும் 2 ஆகிய மூன்று நாட்களும் மதியம் 12 மணியளவில் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அன்னதானம் நடைபெற்றது.

தொடர்ந்து 5-ஆம் நாளான நேற்று இரவு பாடகர் எஸ்.ஆர். சந்திரன் தலைமையில், கேரளாவின் முன்னணி பாடகர் சனில் மற்றும் முன்னணி பாடகிகள், இசைக்குழுவினரின் மாபெரும் இன்னிசை விருந்து கச்சேரி நடைபெற்றது. இதில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு இசை நிகழ்ச்சியை ரசித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஓட்டப்பிடாரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா கலந்து கொண்டார். MST கபடி குழு சார்பில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மாணவ, மாணவியருக்கு தங்க நாணயமும், இரண்டாம் இடம் பெற்ற



மாணவ, மாணவியருக்கு வெள்ளி நாணயமும் வழங்கப்பட்டது.

மேலும், அதிக மதிப்பெண் பெற்ற 10 மாணவ, மாணவியருக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா மற்றும் தூத்துக்குடி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன் பாண்டி ரவி ஆகியோர் பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை MST மாதாநகர் கபடி குழுவினர் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

சிறுமிகளின் "ஹாய்"... நெகிழ்ந்து நின்ற சண்முகையா!

நிகழ்ச்சி முடிந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா காரில் புறப்பட்டுச் செல்லும்போது, கார் அருகில் நின்றிருந்த சிறுமிகள் அவரை பார்த்து அன்புடன் "ஹாய்" எனக் கூறினர்.

உடனே காரை நிறுத்திய சண்முகையா, சிறுமிகளை அருகில் அழைத்து அவர்களுடன் கை கொடுத்து அன்புடன் உரையாடினார். தொடர்ந்து அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டு புன்னகையுடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இந்த நிகழ்வு அங்கிருந்த பொதுமக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# என் கடைசி மூச்சு இருக்கும் வரை மக்கள் பணி செய்வேன் முத்து வெங்கட்ராம் உருக்கம்




கோவை தங்க நகை தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவராக பல்வேறு பணிகளை செய்து வருபவர் முத்து வெங்கட்ராம். சிறுவயது முதலே கடினமாக உழைத்து இன்று சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கிறார். தங்க நகை தயாரிப்பாளர்களின் வாழ்வாதாரத்திற்காகவும், அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்து வருகிறார். இந்த நிலையிலே, இவரது சாதனையான வாழ்வியல் பயணத்தை மையப்படுத்தி, நமது நம்பிக்கை மாத இதழில் கட்டுரை வெளியிட தொடங்கி இருக்கின்றனர். இதன் முதல் பிரதி அறிமுக விழா கோவை வைசியாள் வீதியில் அமைந்திருக்கின்ற ஜெயராம் ஹாலில் நடைபெற்றது. கோவை சார்ந்த பல்வேறு தொழில் முனைவோர் பிரபலங்கள் பங்கேற்று முத்து வெங்கட்ராம் சாதனை பயணத்தின் புத்தகத்தை வெளியிட்டனர். பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய முத்து வெங்கட்ராம், ஒருவது வாழ்வியல் பயணம் அடுத்து வரை உத்வேகப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். அந்த வகையில் சிறு வயது முதலே கடினமாக உழைத்து இன்று சமூகத்தில் பல்வேறு மக்கள் நல பணிகளை செய்து வரும் தனது வாழ்வியல் குறிப்பை பொதுமக்களிடம் வெளிப்படுத்துவதன் வாயிலாக பலரும் தாங்கள் சாதிக்க வேண்டும் என்று எண்ணம் உருவாகும் என தெரிவித்தார். கடின உழைப்பிற்கு அங்கீகாரமாக மக்கள் கொடுத்த மகுடத்தை ஏற்பதாக தெரிவித்த சாதனையாளர் முத்து வெங்கட்ராம், எனது இறுதி மூச்சு வரை மக்களுக்காக பல்வேறு பணிகளை செய்வேன் என தெரிவித்தார். தங்க நகை தயாரிப்பாளர்களின் வாழ்வியல் மேம்பட்டு, தங்கம் போல் ஜொலிக்கவே, தனது பணிகளை முதன்மை கடமையாக செய்து வருவதாக பலரும் முத்து வெங்கட்ராமை பாராட்டினார்.

# கோவை கொடிசியா வளாகத்தில் கிருஷ்ண ஜன்மாஷ்டமியை கொண்டாடும்



தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில், சாதி, மதம், சமூகம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து கோடிக்கணக்கான மக்களால் மிகுந்த பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநட்சத்திர அவதார தினமான ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி, கோவை கொடிசியா வளாகம் அருகே அமைந்துள்ள இஸ்கான் கோயம்புத்தூர் - ஸ்ரீ ஜகந்நாதர் (ஹரே கிருஷ்ணா) கோயிலில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு மூன்று நாள் கொண்டாட்டங்களாக, செப்டம்பர் 3 முதல் செப்டம்பர் 5ம் தேதி வரை நடைபெறும். நிகழ்வில், இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா நடைபெற்றது. இஸ்கான் திருக்கோவிலின், மூத்த தலைவரான பக்தி விநோத ஸ்வாமி மகாராஜ் அவர்களது, வழிகாட்டுதலின் கீழ் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாபெரும் 1,008 கலச அபிஷேகம் மற்றும், முக்கிய சிறப்பம்சமாக இந்த ஆண்டின் ஜன்மாஷ்டமி கொண்டாட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாக, இன்று மாலை 7:30 மணி முதல் இரவு 9:00 மணி வரை நடைபெறவுள்ள திருவுருவ மூர்த்திகளுக்கான மாபெரும் அபிஷேகம் அமைய உள்ளது. இந்தப் புனித அபிஷேகம் தங்க முலாம் பூசப்பட்ட, வெள்ளி மற்றும் செம்புப் பாத்திரங்களால் தயாரிக்கப்பட்ட 1,008 கலசங்களைக்கொண்டு நடைபெற உள்ளது. இந்த மங்களகரமான சடங்கிற்குப் பயன்படுத்தப்படும் நீர், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள புனித நதிகள் மற்றும் தீர்த்தத் தலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது இதன் மூலம் இந்தியாவின் புனித யாத்திரைத் தலங்களின் புனிதத்தன்மை கோயம்புத்தூரில் நடைபெறும் இந்த சிறப்பு நிகழ்வில் ஒன்றிணையும். பாரம்பரிய வேத சடங்குகள், பக்திப் பாடல்கள் மற்றும் பகவானின் திருநாமங்களின் கூட்டு சங்கீர்த்தனம் ஆகியவற்றுடன் அபிஷேகமும் நடைபெற்று வருகின்றது. இந்த தரிசனத்திற்காக சுமார் ஆயிர கணக்கான பொதுமக்கள் வந்த வண்ணம் உள்ளனர். மேலும் குழந்தைகளுக்கு வேடமணிதல் மற்றும் பாரம்பரிய உடை போட்டிகள், ஓவியம் மற்றும் வண்ணப்படம் வரைதல், பாடல், கலாசார நிகழ்ச்சிகள், நாடகம், பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒட்டன்சத்திரத்தில் வீட்டை சேதப்படுத்திய யானை உயிர் தப்பிய தம்பதி





பழநி: ஒட்டன்சத்திரம் அருகே காட்டு யானை வீட்டை சேதப்படுத்தியது. அங்கு வசித்த தம்பதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். ஒட்டன்சத்திரம் வனப் பகுதியையொட்டி அமைந்துள்ள பரப்பலாறு அணை, பெத்தேல்புரம், வடகாடு, புலிக்குத்திக்காடு ஆகிய மலைக் கிராமங்களில் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ளது.

இந்த யானைகள் அடிக்கடி உணவு மற்றும் தண்ணீருக்காக பரப்பலாறு அணை பகுதி, வனப்பகுதியையொட்டி உள்ள விளைநிலங்களுக்குள் நுழைவது வாடிக்கையாக உள்ளது. கடந்த சில நாட்களாக மலைக்கிராமங்களில் ஒற்றையானை நடமாட்டம் உள்ளது.

நேற்று முன்தினம் இரவு பெத்தேல்புரம் கிராமத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் உணவு தேடி நுழைந்த ஒற்றை யானை, குபேந்திரன் - ஜீவரத்தினம் தம்பதியின் வீட்டின் மேற்கூரையை உடைத்து சேதப்படுத்தியது. சத்தம் கேட்டு வெளியே வந்த தம்பதி, வீட்டு வாசலில் யானை நிற்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். யானையை பார்த்து கூச்சலிட்டனர்.

சிறிது நேரத்தில் யானை அங்கிருந்து சென்றுவிட்டது. தகவலறிந்து நேற்று காலை அங்கு சென்ற ஒட்டன்சத்திரம் வனத்துறையினர் சேதமடைந்த வீட்டை ஆய்வு செய்தனர். குடியிருப்பு பகுதி அருகே சுற்றித் திரியும் யானையை தொடர்ந்து கண்காணித்து விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் சம்பள பணத்தில், சட்ட விரோதமாக பணம் பிடித்தம் செய்யும், அதிகாரிகளை கண்டித்து வரும் 7ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த தொழிலாளர்கள் திட்டம்



கோவை மருதமலை பகுதியில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில்,பல்கலைக்கழகத்தில் பணியாற்றும், தொழிலாளர்கள் சங்கத்தின், சார்பாக அவசர பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில்,கடந்தமாதம் தொழிலாளர்களின்சம்பள கணக்கிலிருந்து பாரதியார் பல்கலைக்கழக நிர்வாகம், ரூபாய் 1000 முதல் 3000 வரை எந்த வித முன்னறிவிப்பும் இன்றி, சட்ட விரோதமாக பிடித்தம் செய்துள்ளது. இது தொடர்பாக பதிவாளரிடம் கேட்டபோது இ.எஸ்ஐநிறுவனத்திற்கு கட்டிய தொகை என்று குறிப்பிட்டார். அது சட்டப்படி தவறு என்று சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது மேலும் கடந்த 11.8.2026 அன்றுநடந்தகுறைதீர்ப்பு கூட்டத்தில் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்த பணத்தை ஆட்சி குழு கூட்டத்தில் அனுமதி பெற்று திருப்பி செலுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் வருகின்ற மாதங்களில் அவ்வாறான அபராத தொகைகளை பிடிக்க மாட்டோம் என்றும் இஎஸ்ஐ சட்டத்தால் அனுமதிக்க கூடிய 0.75% மட்டுமே பிடித்தம் செய்யப்படும்என்று உறுதியளித்தார்.ஆனால் இந்த மாதம் 02.09.2026அன்று அனைவருக்கும் சம்பளம் போடப்பட்ட போது . இ.எஸ்.ஐ கான அபராதத் தொகைரூபாய்500பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. பதிவாளர்சொன்னஅந்த வாக்குறுதியை காப்பாற்றவில்லை என்பதை தொழிற்சங்கம் பதிவு செய்கிறது இது தொடர்பாக சங்கம் கோவை மாவட்ட இ.எஸ்.ஐ துணை இயக்குனர் மற்றும் இணை இயக்குனர்களிடம் தொடர்பு கொண்டு பேசிய போது அவர்கள் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிதி அலுவலகத்தில் உள்ள மோகன்ராஜ் என்பவரிடம் இவ்வாறு பிடித்தம் செய்வது சட்டப்படி தவறு ஏற்கப்பட மாட்டாது என்றும் அவ்வாறு தொடர்ந்து பிடிக்கப்படும்பட்சத்தில் உரிய அனுமதி பெற்று, ஆய்வு நடத்தி அதனை தொழிலாளர்களுக்கு திருப்பி பெற்று வழங்கி விடுவோம், மேலும் அவ்வாறு செய்தற்காக அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்கள் ஆனால் அதையும் மீறி மோகன்ராஜ் தொழிலாளர்களிடம் 500 ரூபாய்பிடித்தேதீருவேன் என்று பிடிவாதமாக செய்துள்ளார் அதற்கு பதிவாளரும் ஒப்புதல் கொடுத்துள்ளார் இதனை தொழிற்சங்கம் கண்டிப்பதுடன், அதனால், வரும் 7ம் தேதி, முதல் கண்டன முழக்க ஆர்ப்பாட்டம் மற்றும் தொடர் போராட்டங்களும்நடத்தி பிடித்த உள்ளாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க பொதுச்செயலாளர் ரமேஷ் குமார், சங்க தலைவர் சிந்தாமணி மற்றும் செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## இனிமேல் துணை தாசில்தார்களுக்கும் வருவாய் சான்றிதழ்கள் வழங்க அதிகாரம் தமிழக அரசு புதிய நடவடிக்கை



சென்னை: பொதுமக்களுக்கு வருவாய் சான்றிதழ்களை விரைவாகவும், வெளிப்படையாகவும் வழங்கும் வகையில் தாசில்தார் அதிகாரத்தை துணை தாசில்தார்களுக்கும் பகிர்ந்து அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இதுகுறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையில், "தாலுகா தாசில்தார்களால் வழங்கப்பட்டு வந்த குறிப்பிட்ட வருவாய் சான்றிதழ்களை இனி சமூகப் பாதுகாப்புத் திட்ட தாசில்தார் (Tahsildar-SSS) மற்றும் துணை தாசில்தார் (Deputy Tahsildar) ஆகியோரும் வழங்கும் வகையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தாசில்தார்களின் பணிச்சுமையைக் குறைத்து, பொதுமக்களின் விண்ணப்பங்கள் தேங்காமல் விரைவாக சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வருவாய்மற்றும்பேரிடர்மேலாண்மைத்துறை, தமிழ்நாடுமின்ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் 26 வகையான மின்னணு சான்றிதழ் சேவைகளை இ-சேவை மையங்கள் மூலம்வழங்கிவருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களுக்காக வருவாய் சான்றிதழ்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், தாசில்தார்களுக்கு விண்ணப்பங்களின் பணிச்சுமை அதிகரித்து, சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

மூன்றடுக்கு சரிபார்ப்பு மற்றும் ஒப்புதல்

இதனைத் தவிர்க்கும் வகையில், சமூகப் பாதுகாப்புத்திட்டதாசில்தார்களின் பணிச்சுமை குறைந்துள்ளதை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கமான தாலுகா தாசில்தாரிடம் இருந்து சமூகப் பாதுகாப்புத் திட்ட தாசில்தாருக்கு பின்வரும் சான்றிதழ்கள் மற்றும் உரிமம் தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பட்டியல் சாதி சமூகச் சான்றிதழ், சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழ், பிற்படுத்தப்பட்டோர் வகுப்புச் சான்றிதழ்,ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களுக்கு மூன்று அடுக்கு சரிபார்ப்பு மற்றும் ஒப்புதல் நடைமுறை பின்பற்றப்படும். அதன்படி, கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், சமூகப் பாதுகாப்புத் திட்ட தாசில்தார் ஆகியோர் அடிப்படையில் இந்த ஒப்புதல் நடைமுறை அமையும்.

12 வகையான சான்றிதழ்களை துணைதாசில்தார் வழங்கலாம்

அதேபோல், தாசில்தார் வழங்கி வந்த 12 வகையான சான்றிதழ்களை இனி துணை தாசில்தார் நிலையிலேயே வழங்கும் வகையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.அவை முதல்தலைமுறை பட்டதாரிச் சான்றிதழ், கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ், வேளாண் வருமானச் சான்றிதழ், விதவைச் சான்றிதழ், வேலையின்மைச் சான்றிதழ், குடும்ப இடம்பெயர்வு சான்றிதழ், சிறு, குறு விவசாயிகள் சான்றிதழ், பேரிடர்களால் கல்விச் சான்றுகள் இழந்ததற்கான சான்றிதழ் ஆகிய சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருமணமாகாதவர் சான்றிதழ், ஆண் குழந்தை இல்லாதவர் சான்றிதழ், பணக்கடன் வழங்குநர் உரிமம், வேலைவாய்ப்புக்கான முதல் தலைமுறை பட்டதாரிச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களை துணை தாசில்தார் அளவில் வழங்குவதன் மூலம், விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் காலத்தையும், சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் கால தாமதத்தையும் குறைக்க முடியும்" என அரசு தெரிவித்துள்ளது.

விண்ணப்பத்தின் நிலையை தெரிந்து கொள்ளலாம்

மேலும், சான்றிதழ் வழங்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன்(TNeGA)இணைந்து மென்பொருளில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. இதன்படி, பொதுமக்கள் தங்களது விண்ணப்பம் எந்த நிலையில் உள்ளது,எந்த அதிகாரியிடம் பரிசீலனையில் உள்ளது என்பதைக் கண்காணிக்க முடியும்.

மேலும், "விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலோ அல்லது திருப்பி அனுப்பப்பட்டாலோ,அதற்கான காரணத்தையும் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மென்பொருள் மாற்றம் செய்யப்பட உள்ளது. மேலும் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்ப ங்களில் தேவையான திருத்தங்களைஎந்தஇ-சேவை மையத்திலும் மேற்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம், பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை எளிதாகக் கண்காணித்து, தேவையான திருத்தங்களை மேற்கொள்ள முடியும். புதிய நடைமுறையின் மூலம் வருவாய் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை மூலம், தாசில்தார்களின் பணிச்சுமை குறைக்கப்படுவதுடன், குறிப்பிட்ட சான்றிதழ்களை துணை தாசில்தார் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்ட தாசில்தார் ஆகியோர் வழங்குவதால், விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலிக்கப்படும்.மேலும்,மூன்று அடுக்குசரிபார்ப்பு,ஆன்லைன் விண்ணப்ப நிலை கண்காணிப்பு மற்றும் நிராகரிப்புக்கான காரணத்தைத் தெரிவிக்கும் நடைமுறை ஆகியவற்றின் மூலம் சான்றிதழ் வழங்கும் பணியில் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும்.







## ஈரோட்டில் அக்டோபர் 25ல் இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால இசைப் பயண மாபெரும் நேரடி இன்னிசை நிகழ்ச்சி

இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால இசைப் பயணத்தைக் கொண்டாடும் வகையில் ஈரோடு டெக்ஸ்வேலியில் வரும் அக்டோபர் 25-ம் தேதி மாபெரும் நேரடி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அருண் ஈவென்ட்ஸ் மற்றும் மெர்குரி நிறுவனம் இணைந்து நடத்தும் இந்நிகழ்ச்சி தொடர்பான செய்தியாளர் சந்திப்பு, சேலம் - கோவை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஈரோடு ஃபார்ச்சூன் டெக்ஸ்வேலியில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் மில்கி மிஸ்ட் டெய்ரி ஃபுட் லிமிடெட் நிறுவனத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சதீஷ் குமார், முழுநேர இயக்குநர் அனிதா சதீஷ் குமார், ஏற்றுமதி மற்றும் சில்லறை விற்பனை மேலாளர் சஞ்சய் சதீஷ் குமார், பிராண்டிங் மேலாளர் மித்ரா, நிதி ஆய்வாளர் நிதின் சதீஷ் குமார், ஃபார்ச்சூன் சிட்டி - டெக்ஸ்வேலியின் நிர்வாக இயக்குநர் ராஜசேகர், செயல் இயக்குநர் டி.பி. குமார், இயக்குநர் உமா சேகர், தலைமை நிர்வாக அதிகாரி கோவர்த்தனன், எம். சி.ஆர். டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனர்களான எம். சி.ராபின், எம்.சி.ரிக்சன், பி.என்.ஐ.நிர்வாகஇயக்குநர் மகேஷ் பி.வி.கிரி, ரெனாட்டஸ் ப்ரோகான் பிரைவேட் லிமிடெட் தலைமை நிர்வாக அதிகாரி பகலா வெங்கடேஷ், வால்யூம் ஸீரோ நிர்வாக இயக்குநர் ராஜாராம் முருகையா, பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ் & பைப்ப்ஸ் நிர்வாக இயக்குநர் எல்லாளன், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் சேலம் மண்டலத் தலைவர் ராஜவேலு, பிராண்டிங் பீஸ் & கோ கச்சேரி நிறுவனத் நிறுவனர் விக்னேஷ் வேலுசாமி, அனில் ஃபுட்ஸ் நிறுவனத்தலைமை நிர்வாக அதிகாரி பிரபாகர் யுவராஜன், சர்வேஷ் எக்ஸ்போர்ட்ஸ் மற்றும் தியா எக்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் பி.எஸ். கோபால கிருஷ்ணன், செந்தில் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை டாக்டர் பி.எஸ். கௌரி சங்கர், V சோடா, 369 நிறுவனர் அருண் மாதேஸ்வரன், MJM கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் அவ்வை.ஆர். முருகன், யெஸ் ப்ரின்டிங்ஸ் உரிமையாளர் ஆனந்த் அர்தநாரீஸ்வர் மற்றும் வேல்ஸ் குளோபல் பள்ளி நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான டிக்கெட் விற்பனையை மில்கி மிஸ்ட் தலைவர் சதீஷ் குமார் தொடங்கி வைக்க,பல்வேறு நிறுவனங்களின் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். நிகழ்வு குறித்து சதீஷ் குமார் கூறுகையில், தமிழகத்தின் பெருமைமிகு அடையாளமாக விளங்கும் இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால இசைப் பயணத்தை ஈரோட்டில் கொண்டாடுவது மிகுந்த பெருமைக்குரியது என்றும், அவருடைய இசைப் பயணத்தில் நாமும் பங்கேற்றிருப்பதே சிறப்பானது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து அருண் ஈவென்ட்ஸ் நிறுவனத் தலைமை நிர்வாக அதிகாரி அருண் கூறுகையில், கோவை, திருப்பூர்,நீலகிரி,ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்

இந்நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், 8 ஆண்டுகளுக்கு முன்பு ஈரோட்டில் நடைபெற்ற இளையராஜாவின் நிகழ்ச்சியை விட இது மேலும் பிரம்மாண்டமாக அமையும் என்றும் கூறினார்.'ஜெயிலர்','டாக்டர்', 'பீஸ்ட்', 'விடுதலை' போன்ற திரைப்படங்களின் கலை இயக்குநர் கிரண் இதற்கான பிரம்மாண்ட மேடையை அமைக்க உள்ளதாகவும், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ரசிகர்களுக்கு மறக்க முடியாத அனுபவமாக இது இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அக்டோபர் 25-ம் தேதி நடைபெறும்இந்தநிகழ்ச்சிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை இணையதளத்தில் நடைபெற்று வருகிறது.

# நேபாள பெருவெள்ளம் ரூ.24,187 கோடி இழப்பு!



நேபாளத்தில் பெருவெள்ளத்தால் சுமார் ரூ. 24,187 கோடி மதிப்பில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. திபெத் - நேபாள எல்லையில் பெரும் பனிப்பாறைச் சரிவால் லெண்டே நதியில் கடந்த ஆகஸ்ட் 26-ல் ஏற்பட்ட பெருவெள்ளம், நேபாளத்தின் போடே கோஷி நதியில் சீறிப்பாய்ந்தது. சகதியுடன் பல அடி உயரத்துக்கு பெருக்கெடுத்த வெள்ளத்தில் கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் அடியோடு அழிந்தன. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், பாலங்கள், சாலைகள், நீர்மின் நிலையங்கள், இதர உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டன.

போடே கோஷி நதி வெள்ளம், திரிசூலி, நாராயணி நதிகளிலும் கலந்து பெரும் சேதத்தை விளைவித்தது. ரசுவா, நுவாகோட், சித்வன், நவல்பராசி கிழக்கு, நவல்பராசி மேற்கு, கோர்கா, தனாஹு ஆகிய மாவட்டங்களை புரட்டிப் போட்ட இந்தப் பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,290-ஆக உயர்ந்துள்ளது. நேபாளத்தில் இந்தப் பெருவெள்ளத்தால் 2.56 பில்லியன் டாலர் (சுமார்ரூ.24,187கோடி) மதிப்பிலான இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அதுமட்டுமின்றி, அந்நாட்டின் அத்தியாவசிய கட்டுமானப் பணிகளான சாலைகள் மற்றும் தற்காலிக முகாம்களை அமைப்பதற்கும், குடிநீர் வழங்குவதற்கும், மின்சாரத்தை மீட்டெடுப்பதற்கும் அடுத்த 4 மாதங்களில் மட்டும் 52.6 மில்லியன் டாலர் (சுமார் ரூ. 496 கோடி) செலவாகும் எனவும் தெரிவித்துள்ளது.

# இல்லாத டயர் ஆலையை மூடுவது பற்றி பேரவையில் விவாதம்! எக்ஸ் தளத்தில் கீர்த்தனா விளக்கம்!!




ராணிப்பேட்டையில் இல்லாத ஒரு டயர் தொழிற்சாலையை மூடுவது குறித்து பேரவையில் விவாதம் நடைபெற்றது குறித்து தமிழக தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் விளக்கம் கொடுத்துள்ளார்.

இல்லாத தொழிற்சாலையைமூடுவதுகுறித்து பேரவையில் விவாதம் நடைபெற்றிருக்கிறதே என்று அறிந்து மக்கள் அதிருப்தி அடைந்த நிலையில்,பல்வேறு கட்சியினரும் இது குறித்து விமர்சனம் செய்து வருகிறார்கள்.

தமிழக சட்டப்பேரவையில் பேசிய ராணிப்பேட்டைதவெகஎம்எல்ஏ தாஹிரா, தங்களது தொகுதியில் ஜே.கே. டயர் தொழிற்சாலை இருக்கிறது. இங்கு டயர்கள் எரிக்கப்படுவதால் மாசற்ற சூழல் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மக்களும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். தவெக அரசு இந்த ஆலையை மூட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த தொழிற்துறை அமைச்சர் கீர்த்தனா,தமிழ்நாட்டில் அனைத்து ஆலைகளும் இருக்க வேண்டும். டயர் தொழிற்சாலைக்கு உரிய சட்டத்திருத்தங்கள் கொடுக்கப்பட்டு, அவர்கள் இங்கு தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

ஆனால், இந்த விவாதம் பேசுபொருளானது, காரணம், இப்படி ஒரு தொழிற்சாலையே ராணிப்பேட்டையில் இல்லை என்று பல முக்கிய பிரபலங்கள் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு தொகுதியின் எம்எல்ஏவுக்கு அங்கு இருக்கும் பிரச்னைகள் குறித்தும், ஆலைகள் குறித்தும் உண்மை நிலவரம் தெரிந்திருக்கவில்லையே என்று பலரும் கண்ணீர் விடும் எமோஜிகளுடன் கருத்துகளை பதிவிட்டிருந்ததால் வைரலானது.

இது குறித்து அமைச்சர் கீர்த்தனா தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ராணிப்பேட்டையில் ஜே.கே. டயர் நிறுவனம் குறித்து சட்டப்பேரவையில் ஒரு குறிப்பு வெளியானது. ஆனால் அது குறித்து சரிபார்த்ததில், ராணிப்பேட்டையில் ஜே.கே. டயர் நிறுவனத்திற்கு உற்பத்தி ஆலை எதுவும் இல்லை என்பது தெரியவந்துள்ளது. இருப்பினும், பேரவை உறுப்பினர் எழுப்பிய சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அந்த நிறுவனம் கண்டறியப்படும்; மேலும் தேவைப்படும் இடங்களில் உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த விவாதம் குறித்து அறிந்து, ஜேகே டையர் நிறுவனமும், தங்கள் செயல்பாடுகள் அனைத்தும் சட்டரீதியான சுற்றுச்சூழல் அனுமதிகள் பெற்று, ஒழுங்குமுறைத்தேவைகளுக்கு இணங்கவே செயல்பட்டு வருகின்றன என்பதை நிர்வாகம் சார்பில் தெளிவுபடுத்தியிருக்கிறது.

மேலும், தமிழ்நாட்டில் 3,510 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறன் கொண்ட ரூ.5,143 கோடி மதிப்பிலான முதலீட்டினை மேற்கொள்ளும் வகையில், ஜேகே டையர் நிறுவனம், வழிகாட்டுதல் தமிழ்நாடு அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதையும் இங்கே குறிப்பிடுகிறேன் என்று பதிவிட்டு,அந்த புகைப்படத்தையும் பகிர்ந்துள்ளார் அமைச்சர் கீர்த்தனா.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கல்லூரி முதல்வர்கள், செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர்கள், முதன்மை மருத்துவ அலுவலர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள் மற்றும் நம்பிக்கை மைய ஆலோசகர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ்மற்றும்பால்வினைநோய்கள்தொடர்பானவிழிப்புணர்வுபயிற்சிமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி தலைமையில் (3.9.2026) அன்று நடைபெற்றது.

# Terrorist killed in joint operation by security forces in Jammu and Kashmir's Budgam



*One terrorist was killed on Friday in a joint operation carried out by the Indian Army and Jammu and Kashmir Police in a forested area deep inside Budgam district, an official statement said.*

*Srinagar-based Chinar Corps posted on X,"Based on specific intelligence input, a joint search operation was launched by the Indian Army, J&K Police and CRPF in Ashdar Gali, Budgam.*

*"Vigilant troops observed suspicious activity and upon being challenged, terrorists opened fire, prompting a fierce exchange of gunfire during which one terrorist was neutralised and one AK rifle was recovered. A search operation is in progress." The operation remains underway as security forces continue to search for another terrorist believed to be hiding in the same area, news agency PTI reported.*

*The identity of the terrorist killed in the operation has not yet been established.*

# விக்சித் பாரத்யங் லீடர்ஸ் டயலாக் – 2027 ஈரோடு மாவட்ட இளைஞர்கள் அதிகளவில் பங்கேற்க மாவட்ட ஆட்சியர் அழைப்பு



மேராயுவபாரத் (MY Bharat) சார்பில்"விக்சித் பாரத் யங் லீடர்ஸ் டயலாக் (VBYLD) 2027" என்ற தேசிய அளவிலான இளைஞர் ஈடுபாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதும், அவர்களின் புதியசிந்தனைகள், கருத்துகள் மற்றும் திறமைகளை தேசக்கட்டமைப்பில் பயன்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கியநோக்கமாகும்.

இத்திட்டத்தின் முதல்கட்டமாக "விக்சித் பாரத் வினாடி வினா" ஆன்லைன் முறையில் 17.08.2026 முதல் 30.09.2026 வரை MY Bharat இணையதளம் மூலம் நடைபெறுகிறது. 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் தகுதியுடையவர்கள். வினாடி வினாவைத் தொடர்ந்து கட்டுரைஎழுதுதல் உள்ளிட்ட மாவட்ட, இதில் பங்கேற்க மாநில மற்றும் தேசிய அளவிலான அடுத்தடுத்த போட்டிகள் நடைபெற உள்ளன.

மேலும், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஓவியம், நாட்டுப்புறநடனம், நாட்டுப்புறப்பாடல்,பேச்சுப்போட்டி மற்றும் கவிதை எழுதுதல் உள்ளிட்டகலாச்சாரப்போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்காக கல்வி நிறுவனங்கள், கல்வித்துறை மற்றும் தொடர்புடைய துறைகள் ஒருங்கிணைந்துசெயல்பட்டு, தகுதியுடைய இளைஞர்களிடையே பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதிகபட்ச இளைஞர் பங்கேற்பை உறுதிசெய்யுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டு உள்ளார்.

ஈரோடு மாவட்ட இளைஞர்கள் அனைவரும் இந்த தேசிய அளவிலான வாய்ப்பை பயன்படுத்தி, தங்களது அறிவு, திறமை, படைப்பாற்றல் மற்றும் புதிய சிந்தனைகளை "விக்சித் பாரத்" உருவாக்கும் முயற்சியில் பங்களிக்குமாறு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

# மழை இல்லாததால் வேதாரண்யத்தில் உச்சத்தை தொட்ட உப்பு உற்பத்தி.!



நாகை: வேதாரண்யம் பகுதியில் உப்பு உற்பத்தி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மழை இல்லாத காரணத்தாலும், வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாலும் அங்கு உப்பு உற்பத்தி மும்முரமாக உள்ளது. இது குறித்து பேசிய உப்பு உற்பத்தி பணியாளர்கள் தொடர் வெயில் காரணமாக உப்பு உற்பத்தி இலக்கை எட்டியும், வேதாரண்யத்தில் தொடர்ந்து உப்பு உற்பத்தி தீவிரமாக நடந்து வருகிறது.

கடுமையான வெயிலைத் தவிர்க்க தாங்கள் அதிகாலை 3 மணி முதலே பணியை தொடங்குவதாகவும் கூறி உள்ளனர்.

இதனிடையே அதிக உற்பத்தி மற்றும் கொள்முதல் விலை குறைவு காரணமாகஉப்புஉற்பத்தியாளர்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இதுகுறித்து பேசி இருக்கும் உப்பு உற்பத்தியாளர்கள், நடப்பாண்டில் மழை பொய்த்து போய் வெயிலின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ளது. இதனால் வேதாரண்யத்தில் நடப்பு ஆண்டிற்கான உப்பு உற்பத்தி கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை தொட்டுள்ளது.

ஆண்டுதோறும் சராசரியாக 7 லட்சம் டன் உப்புஉற்பத்திசெய்யப்படும் நிலையில், இந்த ஆண்டு தற்போது வரை 10 லட்சம் டன்னாக உப்பு உற்பத்தி உயர்ந்துள்ளதாக கூறி உள்ளனர். ஒருபக்கம் உப்பு உற்பத்தி அதிகரித்திருந்தாலும், கொள்முதல் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் தாங்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் கவலைதெரிவித்து உள்ளனர். கொள்முதல் விலைபாதியாககுறைந்துவிட்டதாகவும் குறிப்பிட்டு உள்ளனர்.

# மனைவியின் வேலை பறிபோனதால் ஆத்திரம்: அரசுப்பள்ளி காலை உணவு சாம்பாரில் சாணி பவுடர் கலக்க தூண்டிய நபர் கைது



ஈரோடு: சத்தியமங்கலத்தில் மனைவியின் வேலை பறிபோன ஆத்திரத்தில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு தயாரிக்கும் காலை உணவு சாம்பாரில் சாணி பவுடரை கலக்கத்தூண்டிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே சிக்கரசம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ராம பையலூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ளது.இந்தபள்ளியில் தமிழ்நாடு அரசின் காலை உணவு திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

தயார் செய்யப்பட்ட சாம்பாரின் தரம் குறித்து அறிவதற்காக பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் ரேவதி அதைசுவைத்துபார்த்தபோது சாம்பாரில் கசப்புத்தன்மைஇருந்ததால் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர் குமுதாவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் சத்தியமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலரின் அறிவுரையின் பேரில் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதைத் தொடர்ந்து, சத்தியமங்கலம் காவல்துறையினர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அந்த அரசு நடுநிலைப்பள்ளியில்விசாரணை மேற்கொண்டனர்.ஆசிரியருக்கு வழங்கபட்ட சாம்பார் அதிக அளவில் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டதால் போலீசாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. அது தொடர்பாக காலை உணவு திட்ட சமையலர் பொன்னம்மாவிடம் விசாரித்தபோது அவர் அதிகமாக மஞ்சள் தூள் கலக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், ஆசிரியருக்கு சுவைத்து பார்ப்பதற்காக வழங்கப்பட்ட சாம்பாரில் மட்டும் சாணி பவுடர் கலந்தது தெரிய வந்தது. ஆசிரியருக்கு சாம்பாரை கொண்டுவந்து கொடுத்தது யார்? என்பது குறித்து விசாரித்தபோது, ஒரு மாணவி கொடுத்தது தெரியவந்தது.

அந்த மாணவியிடம் விசாரித்ததில், ராம பையலூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 48) என்பவர் அவரை தூண்டிவிட்டு சாணி பவுடரை காலை உணவில் கலக்க கூறியது தெரியவந்தது.மேலும், ஆறுமுகம் காலை உணவிற்கான சாம்பாரில் சாணி பவுடரை கலக்குமாறு தெரிவித்ததாகவும்,ஆனால், அந்த மாணவி ஆசிரியர் சுவைத்து பார்ப்பதற்காக வழங்கப்படும் சிறிதளவு சாம்பாரில் மட்டும்சாணிபவுடரை கலந்ததும் விசாரணையில் தெரிய வந்தது. போலீசார் ஆறுமுகத்தை பிடித்து விசாரித்தனர். அதில், ஆறுமுகத்தின் மனைவி ஆலம்மாள் என்பவர் அரசு நடுநிலைப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்திற்காக உணவு சமைக்கும் சமையல் பணி மேற்கொண்டு வந்ததாகவும், அவர் சரிவர சமைக்காததால் அவருக்கு பதிலாக வேறு சமையலரை நியமித்ததால் ஆத்திரமடைந்த ஆறுமுகம் இச்செயலில் ஈடுபட்டதும் தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து காவல்துறையினர் ஆறுமுகத்தை கைது செய்து சத்தியமங்கலம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். அரசு நடுநிலைப் பள்ளியில் தயாரிக்கப்படும் காலை உணவில் சாணி பவுடர் கலக்க தூண்டப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.